அந்த ஒன்றியத்தால் எங்கிருந்து பெற்றுத்தர முடியும்? ஒன்றியத்தின் பெயரால் கடன் வழங்க மேற்கொள்ளப் பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பேரூராட்சியின் பெயரால் கடன் வழங்கினால், பேரூராட்சிகளும், ஊராட்சிகளும் அதைத் திருப்பிக் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். இல்லையென்றால் தற்காலிகமாகக் குடிநீர்க் குழாய்களை ஆங்காங்கே போட்டுக் கொள்ளலாம்.

பொறியியல் பகுதிநேர பட்டப் படிப்பு

* 246 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் (B.E.) பட்டப் படிப்பு வகுப்புகளில் 1974–75 ஆம் கல்வி ஆண்டில் பகுதி நேரப் படிப்புக்காக எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

(இ) அதில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 392 பேர்கள்.

(இ) 26 பேர்கள்.

[முற்பகல் 9.30]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பகுதி நேர பி.இ. கோர்சுக்கு மாணவர்களைச் சேர்க்க உள்ள விதி முறைகள் என்ன? தாழ்த்தப் பட்ட மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள் போதிய அளவுக்கு வரவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முழு நேரப் பொறியியற் கல்லூரியில் எந்த விகிதாசார அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்களோ அதே விகிதாசார அடிப்படையில்தான் பகுதி நேரப் படிப்புக்கும் சேர்க்கப் படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 சதவிகிதம், பிற்பட்ட மாணவர்களுக்கு 31 சதவிகிதம், மற்றைய பிற வகுப்பினர்கள் எல்லோருக்கும் சேர்த்துப் பொதுவாக 51 சத விகிதம் என்ற அந்த விகிதத்தின் அடிப்படையில்தான் சேர்க்கப் படுகிறார்கள். 1974–75 ஆம் ஆண்டில் சேர்ந்த 392 பேரில் பிற்பட்ட வகுப்பினர் 198 பேர்; தாழ்த்தப்பட்டவர்கள் 26 பேர்; பிற வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து 168 பேர். ஆக,

தாழ்த்தப்பட்டவர்களில் தகுதி உள்ளவர்கள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்; அதிலே மீதி இருந்த இடங்கள் முழுவதும் பிற்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சதவிகித அடிப்படையில் பார்த்தால் 7 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்கள்; 50 சதவிகிதத்தினர் பிற்பட்ட வகுப்பினர்; பிற வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து 42 சதவிகிதத்தினர்.

திரு. நா. வீராசாமி: பார்ட் டைம் பி.இ. கோர்சில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்? சிவில் எஞ்சினியரிங் மாணவர்களுக்கு கிராக்கி இருக்கிறது. எட்டு ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களுக்குத்தான் பி. இ. சிவில் எஞ்சினியரிங் கொடுக்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்களுக்குத்தான் பி.இ. எலட்ரிகல், மெகானிக்கல் கோர்சில் இடம் கிடைக்கின்றது. ஆகவே, வயதானவர்களுக்குத்தான் வாய்ப்பு இருக்கிறதே தவிர, இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் அனுபவம் பெற்றவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆக, இதை மனதில் கொண்டு 5 ஆண்டுகள், 8 ஆண்டுகள் அனுபவம் இருக்கவேண்டுமென்ற முறையை நீக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: குறைந்தது மூன்று ஆண்டுக் காலம் வெளியே பணியாற்றியிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு வருகிறவர்கள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 17 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் எல்லாம் வருகிறபோது அவர்களுக்குதான் முதலிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி முதலிடம் தருகிறபோது பின்னால் தேர்வு பெற்று வருகிறவர்கள் தேங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவ்வளவு பேரையும் எடுத்துக் கொள்ள போதுமான அளவுக்கு பொறியியற் கல்லூரிகளில் இடம் இல்லை. சிவில், மெகானிகல், எலெக்ட்ரிகல் ஒவ்வொன்றுக்கும் 30 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் இட வசதியைப் பொறுத்து 20 இடங்கள் வீதம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

திருவொற்றியூரில் தொழில் நுணுக்கப் பள்ளி

* 247 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—